மத்தேயு–25: *1*
*பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.*

# பத்துக் கன்னிகைகளைக் குறித்த உவமை Pr.K.Joseph

சபையானது விளக்குத் தண்டாக இருக்கிறது என்பதைக் குறித்தும், பரிசுத்த ஆவியானவர் விளக்காக இருக்கிறார் என்பதைக் குறித்தும் நாம் ஏற்கெனவே கற்றுக்கொண்டோம். பரிசுத்த ஆவியானவர் இல்லாத சபை இருளனடைந்ததாக, மரித்துப்போனதாக, பாரம்பரியமான ஒன்றாகவே இருக்கும். ஆவியானவர் என்ற விளக்கு எரிவதற்கு எண்ணெய் தேவை என்பதைக் குறித்து நாம் இந்த நாளில் கற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்திட தேவன் நமக்கு உதவி செய்வாராக.

<u>மத்தேயு–25: *1–13*</u>

**பத்துக் கன்னிகைகளைக் குறித்த உவமை:**

ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள், ஐந்துபேர் புத்தியில்லாதவர்கள்

புத்தியுள்ளவர்கள் புத்தியில்லாதவர்கள் இவ்விரண்டு குழுவினரும் இரட்சிக்கப்பட்டு சபையில் இருக்கும் மக்களையும் தலைவர்களையுமே குறிக்கிறது. இது இரட்சிக்கப்படாதவர்களுக்கு சொல்லப்பட்ட உவமை அல்ல. மாறாக இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாக இருப்பதற்காக தேவபிள்ளைகளுக்குச் சொல்லப்பட்ட புத்திமதியாக இது இருக்கிறது.

புத்தியுள்ளவர்கள் புத்தியில்லாதவர்கள் என்ற இருகுழுவினிடத்திலும் விளக்கு இருந்தது. விளக்கு இருந்தும் ஒரு கூட்டம் புத்தியுள்ளவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், மற்றொரு கூட்டம் புத்தியில்லாதவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் காரணம் என்ன? இவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள், பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள், அதாவது விளக்கை உடையவர்களாக இருந்தார்கள், ஆனால். . . .

**புத்தியுள்னவர்கள்:**

1. விளக்கையும் எண்ணெயையும் உடையவர்களாக இருந்தார்கள்
   விளக்கு என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது என்று நாம் ஏற்கெனவே பாரத்தோம். எண்ணெய் என்பது எதைக் குறிக்கிறது என்று இப்பொழுது பார்க்கலாம்.
   i. எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவருக்குள் இயேசு கிறிஸ்துவோடு உள்ள நெருக்கமான ஐக்கிய **உறவை**க் குறிக்கிறது. இயேசுவோடு நம்மை அன்பின் உறவுக்குள் நடத்திச் சென்றிட, தேவஅன்பைக் அனுபவிக்க வைத்திட
      - இயேசுவைக் குறித்த அதிக வெளிப்பாடுகள்,
      - நீதி மற்றும் கிறிஸ்துவுக்குள் நாம் யாராக இருக்கிறோம் என்பதைக் குறித்து ஆவல்

   போன்றவற்றை நமக்குக் கொடுப்பதன்மூலம் நமது இருதயத்தை மென்மைப்படுத்திட பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார்.
   ii. இருளான நேரத்தில் வெளிச்சம் கொடுப்பதற்கு விளக்கை ஏற்றப் பயன்படும் ***உபகரணமாகவும்*** எண்ணெய் இருக்கிறது.

நெருக்கமான உறவு என்ற எண்ணெய், வெளிச்சம் கொடுக்கிற வாழ்க்கை என்ற எண்ணெய் நமக்குத் தேவை.

- இயேசுவோடு நெருக்கமான சந்திப்பின் உறவு எப்போதும் நமக்கு இருக்க வேண்டும். இதுவே நம்முடைய சுதத்தரத்தை சாத்தான் திருடிவிடாதவாறு தடுக்கிற வேலையைச் செய்யும். சாத்தான் நம்முடைய சுதந்தரத்தைத் திருட எத்தனிக்கிறான் (யோவான்–10: 10). நம்முடைய பிரதானமான சுதந்திரம் எதுவென்றால் நாம் இயேசுவோடு இணைக்கப்பட்ட வாழ்வை உடையவர்களாக இருப்பது. சாத்தான் இதைத் திருடிவிட்டால் மற்ற அனைத்து சுதந்தரங்களையும் நாம் இழந்தவர்களாகிவிடுவோம். எனவே இயேசுவோடு ஒரு நெருங்கின உறவை மட்டும் விட்டுவிட்டு, மற்ற பல்வேறுபட்ட தரிசனங்கள், திட்டங்கள், ஊழியங்கள், தீர்மானங்களில் நம்மை மூழ்க வைத்து திசைதிருப்பிட சாத்தான் எத்தனிப்பான். நாம் ஜாக்கிரதையுடனும் விழிப்புடனும் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.
- நமது வாழ்வில் நாம் விள்கதை உடையவர்களாக இருந்து வெளிச்சம் கொடுக்கிறவர்களாக வாழ்ந்திட வேண்டும். விளக்கு தொடர்ந்து எரிந்துகொண்டிருக்க எண்ணெய் அவசியம். மத்தேயு–5:16ல் "*இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது*" என்று இயேசு கூறுவதைக் கவனியுங்கள். நம்முடைய வாழ்வில் நாம் பிறருக்கு எவ்வளவு நற்கிரியைகள் செய்கிறவர்களாக வாழ்கிறோம் என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அவனவனுடைய கிரியைக்குத் தக்க பலன் இயேசு வரும்போது அவரோடுகூட வருகிறது. நம்முடைய செயல்களைப் பார்த்து மற்ற மக்கள் பரலோகத் தகப்பனை மகிமைப்படுத்த வேண்டும்.

புத்தியுள்ள கன்னிகைகள் விளக்கையும் எண்ணெயையும் உடையவர்களாக இருந்தது மாத்திரமல்ல, மற்ற கன்னிகைகள் எண்ணெய் கேட்டபோது அவர்கள் பதிலளித்த விதத்திலும் அவர்களுடைய புத்திசாலித் தனத்தைக் கவனியுங்ககள்: மத்–25: 9 *புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்.*

1. "அப்படியல்ல" என்று அதாவது "இல்லை" என்று சொல்கிறார்கள். ஆவிக்குரிய ஆயத்தம் என்பது ஒருவர் மற்றொருவருக்கு மாற்றிக்கொடுக்கக்கூடிய ஒன்று அல்ல. ஒவ்வொருவரும் தாங்களே தங்களை ஆயத்தமாக்குகிற வேலையைச் செய்தாக வேண்டும். எனக்காக நீங்களோ, உங்களுக்காக நானோ ஆயத்தமாகும் செயலைச் செய்ய முடியாது.

2. "போய் எண்ணெயை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். அதாவது விலைகொடுத்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். கிரயம் இல்லாமல் இலவசமாகவோ அல்லது சோம்பேரியாக இருப்பதாலோ, தானாக நடக்கும் என்று நினைப்பதாலோ இயேசுவோடுள்ள உறவில் வளருதல் அல்லது வெளிச்சத்தை மற்றவர்கள் மத்தியில் பிரகாசிக்கச் செய்தல் என்பது நடைபெறமாட்டாது.

**புத்தியில்லாவதர்கள்:**

தாங்கள் எண்ணெயை அலட்சியப்படுத்தி வாழ்ந்ததை "மணவாளன் வருகிறார்" என்ற சத்தம் கேட்கும்போது தான் இவர்கள் உணருகிறார்கள். அப்பொழுது உணர்ந்து என்ன செய்யவது? அது மிகவும் தாமதமாகிவிட்ட நேரமாகும். மத்தேயு–25: 6 *நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.* மணவாளனாம் இயேசு வருகிறார் என்ற சத்தம் தொனிக்கிற தருணம் எப்படிப்பட்ட தருணமாக இருக்கும்? ***நடுராத்திரி***! அந்திக்கிறிஸ்து எங்கும் தெரிந்துகொள்ளப்பட்வர்களை உபத்திரவப்படுத்தும் நேரம், தேவன் தம்முடைய 7முத்திரைகள் மற்றும் 7எக்காள நியாத்தீர்ப்புக்களை பூமியெங்கும் வெளிப்படுத்தி அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யத்தை வாதித்துக்கொண்டிருக்கும் நேரம், மக்கள் திகைத்துத் தடுமாறிக்கொண்டிருக்கும் நேரம் நடுராத்திரியாக இருக்கிறது. அந்தத் தருணத்தில் மணவாளனின் வருகைக்கு ஆயத்தப்படுங்கள் என்ற அழைப்பை தேவனுடைய மனிதர்கள் அறிவித்துக்கொண்டு வருவார்கள். இப்பொழுதே அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை அலட்சியப்படுத்தி, ஆயத்தமில்லாமல் வாழ்ந்த இரட்சிக்கப்பட்ட கூட்டம் அந்த நேரத்தில் அடுத்தவர்களிடம் உதவியை நாடுவதால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. முன்னதாகவே எண்ணெயை உடையவர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

**ஆயத்தப்படுத்தும்போது என்ன நடக்கிறது?**

புத்தியில்லாதவர்களுடைய **விளக்குகள் அணைந்துபோகின்றன**. தேவஜனங்கள் இயேசுவோடு உள்ள உறவில் வளராமல் இருந்தால், தாங்கள் தொய்ந்துபோனவர்களாக, தேவனுடைய வேலையை முழுமையாக, இறுதிவரை செய்ய முடியாதவர்களாக நிற்பார்கள். ஏற்கெனவே ஆயத்தமாயிருந்த புத்தியுள்ளவர்கள் தான் கல்யாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். அந்த நேரத்தில் எண்ணெய் வாங்கச் சென்றபோது மணவாளன் வந்துவிட்டார். கதவு அடைக்கப்பட்டது. "மணவாளன் வருதல்" என்பது தேவன் கொண்டுவருகிற எழுப்புதலின் தருணங்களைக் குறிக்கிறது. எழுப்புதலின் கொண்டாட்டத்திற்குள் விளக்கையும் எண்ணெயையும் உடைவர்களே பிரவேசித்தார்கள்.

மணவாளனோடு கொண்டாட்டத்திற்குள் பிரவேசித்தவர்கள் ஆயத்தமாக இருந்தவர்கள் மாத்திரமே. மற்றவர்கள் எங்களுக்கும் கதவைத் திறந்தருளும் என்று கேட்டபோது. "உங்களை அறியேன்" என்று சொல்லிவிட்டார். இயேசு தங்களுடைய மணவாளன் என்ற நேசஉறவில் இவர்கள் வளரவில்லை. ஆகவே எழுப்புதலின் சந்தோஷத்தை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

கடைசிக்கால எழுப்புதலில் பங்கடைவதற்கு நாம் விளக்கையும் எண்ணெயையும் உடைய புத்தியுள்ள கன்னிகைகளாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கடைசிக்காலத்தின் ஒவ்வொரு நடுராத்திரி போன்ற தருணத்திலும் நாம் ஆயத்தமானவர்களாக இருப்பதற்கு ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும்.

**ஜெபிக்கலாம்:**

அன்பின் தகப்பனே! கடைசி நாட்களில் இருண்ட காலம், பொல்லாத காலம் வரும் என்று நீர் சொல்லியிருக்கிறீர். நாங்கள் விளக்கையும் எண்ணெயையும் உடையவர்களாக எப்போதும் ஆயத்தமுடன் வாழ்ந்திட எங்களுக்கு உதவுவீராக! ஆமென்.